**சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது) செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்:- திரு. செ. ரவிச்சந்திரன், M.Sc., PGDCA.,**

---

செ.மு.ஆணை எண்.அ3/6089/2019, நாள்:- 11.06.2021

பொருள்:- தமிழ்நாடு அமைச்சுப்பணி – சென்னை மாவட்ட வருவாய் அலகு – நேரடி நியமனத்திற்குட்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு-IV தொகுதி-IV- 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆண்டிற்கான காலியிடம் பூர்த்தி செய்வது – தட்டச்சர் பணியிடம் ஒதுக்கீடு வரப்பெற்றது – திரு. S. அண்ணாமலை, தட்டச்சர் - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

படிக்க:-

1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.1635/PSD-A/2019, நாள்:- 21.02.2019.
2. சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது) செயல்முறைகள் எண்.அ3/6089/2019, நாள்:- 01.03.2019, 04.03.2019 மற்றும் 13.07.2019.
3. தலைவர், மாநில கூர்நோக்கு குழு மற்றும் அரசு முதன்மை செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தலைமைச் செயலகம், கடிதம் எண்.13167/CV5/2019-6, நாள்:- 21.05.2021

*-*-*-*-*

**ஆணை:-**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டிற்குரிய காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனத்திற்குட்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு-IV தொகுதி-IV-ற்கான 35 தட்டச்சர்கள் தேர்வு செய்யப்பட்டு பார்வை-1ல் படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக சென்னை மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து பார்வை-2ல் படிக்கப்பட்ட 01.03.2019 மற்றும் 04.03.2019 நாளிட்ட செயல்முறை ஆணைகள் மூலம் பணி நியமனம் வழங்கப்பட்டது. அவ்வாறு பணி நியமனம் செய்யப்பட்ட 34 நபர்களின் பணி பார்வை-2ல் படிக்கப்பட்ட 13.07.2019 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி வரன்முறை செய்து ஆணையிடப்பட்டது.